நிபுணர்கள் சொல்கிறார்கள். எனவே, ஆழியாறிலும், மணக்கடவிலே தொடங்கி ஆழியாறு அணை வரை—அந்த ஆறு ஒரு perennial river; எப்பொழுதும் வற்றாத ஜீவ நதியாக ஓடிக்கொண்டிருக்கின்ற அந்த ஆற்றின் குறுக்கே, ஆங்காங்கே தடுப்பணை கட்டி மழை நீரைச் சேகரித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலே கொங்கு மண்டல விவசாயிகளுக்கு ஒரு பொற்காலமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றி நீங்கள் வரலாற்றில் இடம்பிடித்தீர்களோ, அதைப்போல, ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தையும் நிறைவேற்றி, ஆழியாறிலே தடுப்பணைகளைக் கட்டி, பொற்கால மன்னராக நீங்கள் விளங்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்து விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, வால்பாறை சட்டமன்றத் தொகுதி மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகளில், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், கூடுதலாகப் பெய்யும் மழை நீர், கடலில் கலப்பதைத் தடுக்கும்விதமாக, மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் வகையில், மேலும் கூடுதலாக தடுப்பணைகள் கட்டுதல் குறித்தான கருத்துருவுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. மேலும், ஆழியாறு ஆற்றில் மணக்கடவு வரை மூன்று இடங்களில் தடுப்பணைகளைக் கட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) நீரைத் தேக்குவது தொடர்பான கருத்துருக்கள் கேரள மாநில அரசோடு பேசி, ஒப்புதல் பெற்றவுடன், மேல் நடவடிக்கைகள் தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) வெள்ளையாறு சீரமைப்பினையொட்டி மன்னார்குடி தொகுதி, ஆயக்குடி கிராமம், அராபத் தெருவிலுள்ளவர்களை மறுகுடியமர்வு செய்தல் மற்றும் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் ஒன்றியம், ஆய்க்குடி ஊராட்சி, அராபத் தெருவில், நூற்றுக்கணக்கான குடும்பங்களைச் சார்ந்தவர்கள் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக வசித்து வருகிறார்கள். அவர்களை இப்போது காவேரி டெல்டா பகுதிகளில் வெண்ணாறு உப வடி நிலப் பகுதிகளைத் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றும் ஒரு திட்டத்தின்கீழ், ADB-Asian Development Bank திட்டத்தின்கீழ், ஏறத்தாழ 100 மில்லியன் USD செலவில் கொண்டுவரப்படும் அந்தத் திட்டத்தின்கீழ், Climate Adaptation in Vennar Sub-basin in Cauvery Delta Project (CAVSCDP) என்ற திட்டத்தின்கீழ் மறு குடியமர்வு செய்கிறார்கள். அராபத் தெருவிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரம் தள்ளியிருக்கும் திட்டாணிமுட்டம் என்ற வேறு ஒன்றியத்திலிருக்கும் அந்தப் பகுதிக்கு அவர்களை மறு குடியமர்வு செய்கிறோம். அவர்கள் எல்லோருமே டீக்கடைகளிலும், மளிகைக் கடைகளிலும், வீடுகளிலும் வேலைகளைச் செய்யும், மிகவும் தாழ்த்தப்பட்ட வகுப்பை, குறிப்பாக, minority சமூகத்தை, இஸ்லாமிய வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள்.

நண்பகல் 12–00

ஆனால், அதே திட்டத்தின்கீழ், அந்த ஊராட்சியில் இல்லை, பக்கத்து ஊராட்சியில் 500 மீட்டர் தொலைவிலேயே வீடுகள் கட்டப்படுகின்றன. அவர்களை 500 மீட்டர் தள்ளி குடியமர்வு செய்யாமல், 500 மீட்டருக்குள்ளேயே குடியமர்வு செய்தால், அவர்களது வாழ்வாதாரம் பாதிக்காது, அரசு நிதி உதவிகள் அனைத்தும் அதே ஒன்றியத்தின்கீழ் அவர்களுக்குக் கிடைக்கும். இதே திட்டத்தின்கீழ், அகரபொதக்குடி என்ற பகுதியில் பாழடைந்த ஒரு நடைப்பாலம் உள்ளது. அதை அகற்றி புதிய பாலம் கட்ட வேண்டும். ஆனால், அந்தப் பாலத்தை தற்போதும் இடிக்காமல், dangerous ஆன ஒரு situation–ல் இருக்கிறது. தயவுகூர்ந்து அந்தப் பாலத்தை உடனடியாக இடித்துத் தள்ளி, அங்கு ஒரு புதிய பாலத்தை அரசு கட்டித் தர வேண்டும். இறுதியாக, இதே ஒன்றியத்தில், நீடாமங்கலம் பேரூராட்சி உள்ளது. அங்கே Railway overbridge கட்டப்பட வேண்டும். நீண்ட நெடுங்காலமாக இது வலியுறுத்தப்பட்டுவருகிறது. 2013–2014–ல் clear செய்யப்பட்ட அந்தத் திட்டம்-மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் இதே அவையில் விதி 110–ன்கீழ் அதை அறிவித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா, சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: அதிலும் அரசு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தையும், அவையின் கவனத்தையும் ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆய்க்குடி கிராமத்தில் நீர்வள ஆதாரத் துறையின் பராமரிப்பில் உள்ள வெள்ளையாற்றின் கரையில் மக்கள் வசித்துவருகின்றனர். இந்த நிலையில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதித் திட்டத்தின்மூலம் வெள்ளையாறு சீரமைக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இந்த வெள்ளையாற்றின் கரையில் வசிப்பவர்களை மறுகுடியமர்வு செய்யும் நோக்கில், திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் வட்டம், திட்டாணிமுட்டம் என்ற கிராமத்தில், அரசு புறம்போக்கு நிலத்தில் பொதுப் பணித் துறையின்மூலம், முதல் பகுதியாக 72 குடியிருப்புகளும், இரண்டாம் பகுதியாக 82 குடியிருப்புகளும் கட்டப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் 6 மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். இந்த நிலையில் ஆய்க்குடி கிராமம், அராபத் தெருவில் குடியிருப்பவர்களை பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறையின்மூலம், முறையாகக் கணக்கீடு செய்து, அவர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்து, மறுகுடியமர்த்தப்படுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்; அந்தப் பாலம் பழுதடைந்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதையும் அரசு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கும். அதேபோன்று, Railway மேம்பாலத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார். அதுகுறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அதையும் அரசு ஆய்வு செய்து, பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.